# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2022 சனவரி

## (203) வணிகச் சட்டம்

## பகுதி - A

### வினா இல. 01

இவ்வினா 25 புள்ளிகளுக்காக 14 நோக்கச் சோதனை வினாக்களை (OTQs) கொண்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கு விடையளிக்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் 20 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் **1.4, 1.6, 1.9, 1.11, 1.14** ஆகிய வினாக்களுக்கு சரியான விடை அளிக்கத் தவறியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் விலக்களிக்கப்பட்ட ஊழியர்கள், CIF உடன்படிக்கை போன்றவற்றில் எவ்வித அறிவும் காணப்படவில்லை. அத்துடன், அதிகளவான பரீட்சார்த்திகள் சர்வதேச வர்த்தகப் பிணக்கு பற்றிய எவ்வித அறிவையும் கொண்டிருக்கவில்லை. அதிகமானோர், ஊழியர் ஒருவருக்கும் சுயாதீன ஒப்பந்தகாரர் ஒருவருக்கும் இடையிலான வேறுபாட்டை இனங்காண்பதற்கு பயன்படுத்தக்கூடிய சோதனைகளை ஏற்பிசைவு செய்திருக்கவில்லை.

**பகுதி – A** இற்கு உயர் புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு பரீட்சார்த்திகள் சிவில் சட்டம், பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம், அரசியலமைப்புச் சட்டம், ஒப்பந்தச் சட்டம், சர்வதேசச் சட்டம், தொழில் சட்டம் போன்றவை பற்றிய நல்ல அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி - B

### வினா இல. 02

இவ்வினா பங்குடமைச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இது ஓரளவு இலகுவான வினாவாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் இவ்வினாவின் இரண்டு பகுதிகளுக்கும் சரியான விடைகளை அளித்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 03

இவ்வினா 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிப் பரிவர்த்தனை அறிக்கையிடல் சட்டம் மற்றும் 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துகள் சட்டம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர் ஆயினும் இந்தச் சட்டங்கள் தொடர்பில் போதிய அறிவைக் கொண்டிராததால் அவர்கள் தவறான விடைகளையே வழங்கியிருந்தனர். இவ்வினாவின் **பகுதி (b)** சராசரியான திருப்தி மட்டத்தில் இருந்தது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 04**

இந்த வினா காப்புறுதிச் சட்டம் தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. இது காப்புறுதிச் சட்டத்துடன் தொடர்புடைய ஓரளவு இலகுவான வினாவாகும். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் சரியான விடைகளையும் வழங்கியிருந்தனர். பெரும்பாலானவர்கள் காப்புறுத்தத்தக்க நாட்டம் மற்றும் அதியுயர் நன்னம்பிக்கை ஆகிய எண்ணக்கருக்கள் பற்றிக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் சில பரீட்சார்த்திகள் இந்த எண்ணக்கருக்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்க வில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 05**

இந்த வினா மாற்றத்தகு சாதனங்கள் பற்றிய ஒரு வினாவாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் **பகுதி (a)** இற்கு அரைவாசி சரியான விடைகளை அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் **பகுதி (a)** இற்கு சரியான விடை அளிக்கத் தவறியிருந்தனர். அதிகமான பரீட்சார்த்திகள் **பகுதி (b), (c)** இற்கு சரியான விடை அளிக்கத் தவறியிருந்தனர். பெருமளவானவர்களிடம் மாற்றத்தகு சாதனங்கள் பற்றிய போதுமான அறிவு இருக்கவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 06**

இந்த வினா முகாமைத்துவச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இது அவசியத்தன்மையின் பொருட்டான முகவராண்மையுடன் தொடர்புடைய ஓரளவு இலகுவான வினாவாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் சரியான விடைகளையும் வழங்கியிருந்தனர். அதிகமானவர்கள் இங்கு அவசியத்தன்மையின் பொருட்டான முகவராண்மையொன்று காணப்படுகிறது எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி - C</u>

**வினா இல. 07**

இந்த வினா இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது.

**(A) இந்தப் பகுதி ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது :**

- **(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை அளித்திருந்தனர்.
- **(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை அளிக்கத் தவறியிருந்தனர்.
- **(c)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை அளிக்கத் தவறியிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இல்லை.**

**(B) இந்தப் பகுதி பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது:**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு சரியான விடைகள் அளித்திருந்ததுடன் சம்பந்தப்பட்ட உள்ளார்ந்த நிபந்தனையையும் குறிப்பிட்டிருந்தனர். அதிகமானவர்கள் பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம் தொடர்பில் ஆழமான அறிவைக் கொண்டிருக்கின்றனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

இந்த வினாவுக்கான ஒட்டுமொத்த பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சராசரியான திருப்தி மட்டத்திற்கும் மேல் காணப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் ஏறத்தாழ அரைவாசிப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இது சித்திப் புள்ளியை அடைவதற்கு பெரியளவில் பங்களிப்புச் செய்யக்கூடிய வினாவாகும்.

**மொத்தத்தில், கால்வாசி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாத்தாளுக்கு குறிப்பிடத்தக்களவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.**

- - -

## <u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகப் படிப்பதுடன் அடிக்கடி பரீட்சிக்கப்படும் விடயங்கள் மீது கூடிய கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** வினாவை மிகக் கவனமாக வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை எழுதவும்.

**(3)** வினைச் சொல் நிரல் ஒன்று வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல்லின் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் பாடநூல், மேலதிக புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை படிக்கவும்.

**(5)** வினாத்தாளுக்கு விடையெழுதும்போது விடயங்களைச் சரியாக இனங்கண்டு அவற்றை அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக்கருக்களுடன் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் துல்லியமாக எழுதப்பட்டிருப் பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**(7)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கடைப்பிடியுங்கள்.

**(8)** கடந்தகால வினாத்தாள்கள் மற்றும் விடைகளைக் கற்பதன் மூலம் உங்கள் அறிவினை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

**(9)** முறையான நேர முகாமையில் கவனம் செலுத்தவும்.

**(10)** விடைத்தாள்களை ஒப்படைப்பதற்கு முன் வினா இலகங்களும் சுட்டெண்ணும் உரியவாறு உரிய இடங்களில் இடப்பட்டுள்ளனவா என்பதை முறையாகப் பரீட்சியுங்கள்.

**(11)** முன்னாயத்தத்துடனும் வெற்றியடையும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றுங்கள்.

- * * * -